# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்திய வானிலைத் துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (15.06.2024 முதல் 19.06.2024)

**அறிக்கை எண் 048/2024** **தேதி.14.06.2024**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 17°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 13°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்பட்டது.

### ஈரோடு மாவட்டத்தின் கடந்த வார வானிலை

ஈரோடு மாவட்டத்தின் 11.06.24 முதல் 13.06.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 29°செ முதல் 33°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 23°C முதல் 25°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 86 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 13-24 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (11.06.2024 முதல் 13.06.2024) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 19.06.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 11/06 | 12/06 | 13/06 | தேதி | நாள்-1 15/06 | நாள்-2 16/06 | நாள்-3 17/06 | நாள்-4 18/06 | நாள்-5 19/06 |
| 0.3 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 2 | 2 |
| 33 | 33 | 29 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 37 | 37 | 38 | 37 | 37 |
| 23 | 25 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 26 | 26 | 25 | 25 |
| 6 | 8 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 5 | 4 | 7 | 7 |
| 80 | 86 | 81 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 75 | 86 | 77 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 30 | 40 | 50 | 40 |
| 24 | 15 | 13 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 12 | 10 | 12 | 14 | 12 |
| 230 | 200 | 250 | காற்று வீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (15.06.2024 முதல் 19.06.2024)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 18.06.24 மற்றும் 19.06.24 ஆகிய நாட்களுக்கு இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 37°செ முதல் 38°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10-14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| **15-06-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.4 | 0.0 | 0.0 | 0.6 | 0.4 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **16-06-2024** | 0.0 | 0.0 | 0.3 | 0.0 | 3.8 | 0.9 | 0.0 | 2.1 | 3.5 | 0.0 | 2.4 | 0.0 | 0.0 | 0.0 |
| **17-06-2024** | 13.6 | 14.0 | 9.1 | 0.0 | 4.0 | 9.6 | 3.9 | 1.1 | 5.4 | 1.9 | 6.8 | 0.3 | 0.7 | 3.1 |
| **18-06-2024** | 6.1 | 9.2 | 0.5 | 0.0 | 0.0 | 0.0 | 0.6 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 2.7 | 2.8 |
| **19-06-2024** | 0.0 | 3.3 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 7.3 | 2.6 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | வரும் 5 நாட்களில் மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகமானது மணிக்கு 10 - 20 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனத்தினை தொடரவும். மருந்து தெளிப்பினை காலை நேரங்களில் மழையில்லாத வானிலை எதிர்பார்க்கப்படும்போது மட்டும் மேற்கொள்ளலாம்..<br>நிலவும் வானிலையினைப் பயன்படுத்தி ஒத்திவைக்கப்பட்ட நீர்பாசனம், விதைப்பு, உரமிடல் மற்றும் மருந்து தெளிப்பினை தொடரலாம். |
| நெல் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையைப் பயன்படுத்தி நெல்நடவிற்காக வயலினை தயார்படுத்தவும்.<br>பெய்துள்ள மழையை பயன்படுத்தி வாய்கால் பாசனப்பகுதிகளில் ஆகஸ்ட் மாதத்தில் நெல் நடவு செய்யும் விரும்பும் விவசாயிகள் தக்கை பூண்டு கொழிஞ்சி, சணப்பை போன்ற பசுந்தாள் உரங்களை விதைத்து 45 நாட்கள் கழித்து அந்த இடத்திலே உழுவதன் மூலம் மண்ணின் அங்கத்தன்மையை அதிகப்படுத்தலாம். |
| கரும்பு | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் அதிவேகக் காற்று மற்றும் லேசான மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே கரும்பில் எதிரெதிர் வரிசைகளை விட்டம் கட்டி காற்றினால் சாயமல் பாதுகாக்கவும்.<br>மழை பெய்துள்ளதால் ஏற்பட்ட மண்ணின் ஈரப்பதத்தை கொண்டு வடிகால் வசதியுடன்பின் பருவ கரும்பு நடவை தொடர்ந்து மேற்கொள்ளவும். |
| தக்காளி | நடவு | மானாவாரியில் தக்காளி நடவு செய்ய இது உகந்த பருவம் ஆதலால் தக்க ஆயத்த பணிகளை மேற்கொள்ளவும். |
| வாழை | வளர்பருவம் | மணிக்கு 12 -24 கிமீ வரை வேக காற்றினை எதிர்பார்க்கப்படுவதால் 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| தென்னை | | தென்மேற்கு பருவமழை துவங்கி இருப்பதால் மரம் நடவு செய்ய விரும்பும் விவசாயிகள் தக்க ஆயத்த பணிகளை மேற்கொள்ளவும். மேலும் தென்னைக்கு உரமிட மரத்தைச்சுற்றி 1.8 மீட்டர் தள்ளி அரைவட்ட வடிவில் குழி எடுக்கவும். |
| கால்நடைகள் | | கடந்தவார மழையில் முளைத்த புதிய புற்களை மேயவிடுவதை தவிர்ப்பதனால் கால்நடைகளில் குடற்புழுக்களின் தாக்கத்தினை தவிர்க்கலாம். |

## குறுஞ்செய்தி

- மானாவாரியில் தக்காளி நடவு செய்ய இது உகந்த பருவம் ஆதலால் ஆயத்த பணிகளை மேற்கொள்ளவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**